இரண்டு இடங்களில் சிப்காட் வளாகங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்று அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 29–6–2017 அன்று இப்பேரவையில் விதி எண் 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பெரியகோளபாடி கிராமத்தில் 57.18 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்க சிட்கோ நிறுவனத்திற்கு நிலத்திற்கான முன்நுழைவு அனுமதி 21–6–2017 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டதன் அடிப்படையில், தொழிற்பேட்டைக்கான வரைபடம் தயாரிக்கும் பணியை சிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கால்நடைக் கிளை நிலையம்

***6211—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மேட்டுதிருக்காம்புலியூரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 மார்ச் 20]

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, மேட்டுதிருக்காம்புலியூர் கிராமத்தில், அரசு ஆணை நிலை எண் 9, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 23–1–2018–ன்படி, புதிய கால்நடைக் கிளை நிலையம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) சொல்படி, மக்களின் வழியில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஆகியோரை வணங்குகிறேன்.*

கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட மேட்டுதிருக்காம்புலியூரில், பூசம்பட்டி, மஞ்சபுளிபட்டி மற்றும் S. வெள்ளாளப்பட்டி ஆகிய ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கால்நடைக் கிளை நிலையத்தினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ஆகியோருக்குக் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடவூர் ஒன்றியத்தைச் சார்ந்த இடையாபட்டி மற்றும் தாந்தோணி ஒன்றியத்தைச் சார்ந்த முஷ்தணங்கத்துப்பட்டி ஊராட்சிப் பகுதிகளிலும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் கடந்த 2017–2018 ஆம் ஆண்டில் மட்டும் கரூர் மாவட்டத்திற்கு மொத்தம் 7 கால்நடைக் கிளை நிலையங்களைப் புதிதாகத் தோற்றுவிக்க ஆணை பிறப்பித்துள்ளது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளைக் கூர்ந்து பரிசீலித்து, அவர்கள் கோரிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மேட்டுதிருக்காம்புலியூருடன் கூடுதலாக S. வெள்ளாளப்பட்டி, மஞ்சபுளிபட்டி மற்றும் பூசம்பட்டி ஆகிய இடங்களையும் சேர்த்து கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மட்டும் மொத்தம் 4 கால்நடைக் கிளை நிலையங்கள் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடவூர் ஒன்றியத்திற்குட்பட்ட இடையாபட்டி மற்றும் தாந்தோணி ஒன்றியத்தைச் சார்ந்த முஷ்தணங்கத்துப்பட்டி ஊராட்சிப் பகுதிகளிலும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர்களுடைய கோரிக்கையை துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையை நிறைவேற்றித் தருவேன் என்ற வாக்குறுதியை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*